சங்ககால பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தாய்

அ. கோதேஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஐன்ஸ்டீன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீதபற்பநல்லூர்

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958701

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அனைத்து இலக்கியங்களுமே பெண்ணின் பெருமையைப் பேசுகின்றன. குறிப்பாக சங்க இலக்கியங்கள் பெண்ணின் பெருமையை அதிகமாக பேசுகின்றன. சங்க இலக்கியப் பாடல்களில் ஆண்பாற் புலவர்களைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையிலே பெண்பாற் புலவர்களின் பாடல்கள் காணப்படுகின்றன. எனினும் அப்பாடல்கள் சிறப்பான வகையில் அமைந்துள்ளன. பெண்ணின் உணர்வுகளையும், எண்ணங்களையும், பெருமைகளையும், சிறப்புகளையும் சிறப்புற எடுத்துரைக்கின்றன. அவ்வாறு எடுத்துரைக்கும் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தாயின் சிறப்பையும் பெருமையையும் ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை

தமிழ்மொழியின் தொன்மைக்கும் பெருமைக்கும் சான்றாக விளங்குவது சங்க இலக்கியமாகும். அவ்விலக்கியத்தில் ஆடவர், பெண்டிர் இருபாலரும் இயற்றியுள்ளனர். ஆண்பாற் புலவர்களை நோக்குகையில் பெண்பாற் புலவர்கள் குறைந்த அளவே பாடியுள்ளனர். எனினும் சிறப்பான பாடல்களைத் தந்துள்ளனர். கவிபாடும் அளவிற்கு பெண்களின் கல்வியறிவு இருந்தமைக்கு பெண்பாற் புலவர்களின் பாடல்களே சான்று. அந்தவகையில் பெண்பாற்புலவர்களின் பாடல்களின் வழி தாயின் நிலையையும் சிறப்பினையும் அறிவதாய் இக்கட்டுரை அமைகிறது.

பெண்பாற் புலவர்கள்

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையுடைய நம்முடைய தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் ஆண், பெண் கதாபாத்திரங்களை மையப்படுத்தியே படைக்கப்பட்டுள்ளன. சங்ககாலப் பாடல்களை பாடியதில் ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக பெண்பாற் புலவர்களும் பல பாடல்களை எழுதியதை காணமுடிகிறது. பெண்ணை முதன்மைக் கதாபாத்திரமாக வைத்து எழுத்தப்பட்ட பெரும் காப்பியமான சிலப்பதிகாரம் தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை சேர்க்கும் விதமாக இருப்பதை காணலாம். இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் பங்கு அக்காலத்தில் ஆண்களை விட குறைவாக காணப்பட்டாலும் அவர்களுடைய படைப்புகள் ஆண்களின் படைப்புக்கு நிகராக போற்றப்பட்டதை அவர்களின் பாடல்களின் தன்மையிலிருந்து அறிய முடிகிறது.

சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பல வரலாற்று சிறப்பு மிக்கச் செயல்களை தம் பாடல்கள் வழியே செய்ததை சங்கப் பாடல்கள் வழி நாம் அறிய முடிகிறது. நாடாண்ட மன்னர்கள் உலகம் போற்றும் புலவர்களை போற்றி மகிழ்ந்த காலம் சங்க காலமாகும். பெண்கவிஞர்களின் எண்ணிக்கைக் குறித்து தமிழர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெண் கவிஞர்களின் எண்ணிக்கையே உ.வே.சா.38 எனவும், எஸ்.வையாபுரிப்பிள்ளை 30 எனவும், அவ்வை.துரைசாமிப்பிள்ளை 34 எனவும், புலவர் கா.கோவிந்தன் 27 எனவும், ஔவை நடராசன் 41 எனவும், நா.சஞ்சிவி 25 எனவும், தாயம்மாள் அறிவாணன் 45 எனவும், பாக்யமேரி 40 எனவும் குறிப்பிடுகின்றனர். சங்க கால பெண்பாற்புலவர்கள் 57 பேர் இருந்ததாக பல்வேறு குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

சங்ககால பெண்கள்

தீவினைக்கும், துன்பத்திற்கும் பெண்களே காரணம் என்ற சொல்லுக்கு இடமின்றி சங்க கால மகளிர் விளங்கினர். விழாக்களிலும், சடங்குகளிலும் சமயநிலையிலும், கல்வியிலும், வீரத்திலும், அரசியலிலும், அறிவுரை கூறுவதிலும் அறங்காப்பதிலும், இல்லற வாழ்க்கை நடத்துவதிலும், விருந்தோம்பலிலும் உயர்ந்து விளங்கினர். எனினும், சங்ககால பெண்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் இரண்டாம் தர குடிமகளாக கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப்பெண்ணாக மட்டுமே வாழ்ந்திருக்கிறார்கள். இதனை,

"வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"[1]

(குறுந்.பா.எ.135)

என்னும் பாடலின் வாயிலாக அறியலாம்.

சங்ககாலம் முதல் இன்றுவரை பெண்களை இயல்பாக சுயமாக சிந்திக்க விடாமல் தடுக்கும் நிலை உள்ளது. சங்க காலத்தில் பெண்கள் சமநிலையில் மதிக்கப்படவில்லை எனினும் அவர்களின் நடத்தை, குணாதசியங்கள் முதலிய பண்புநலன்களில் உயர்வாக மதிக்கப்பட்டனர். திறமைகளை வெளிக்கொணர்வதில் எந்த ஒரு தடையும் இல்லை. இருப்பினும் உடன்கட்டை ஏறுதல், கைம்மை நோன்பு போன்ற கொடுமைகள் நிகழ்த்தும் சமுதாயமாகவும் தந்தைவழிச் சமுதாயம் ஆகவும் பெண்ணை வர்ணிக்கும் தன்மை கொண்டதாகவும் விளங்கிது சங்ககாலம்.

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தாய்

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தாய் என்பவள் வீரமிக்கவளாகவும், மனவலிமையுடையவளாகவும், வீர மரணம் குறித்து பெருமிதம் கொள்பவளாகவும் சித்திரிக்கப்படுகிறாள்.

தாயின் கடமை

பெண்மையின் பெருமையே தாய்மைதான். அத்தகைய பெண்களின் பண்புகளைக் குறித்து பெண்பாற்புலவர்களின் பாடல் வாயிலாக அறியலாம். மகனைப் பெற்றுப் பாதுகாத்தல் தாயின் கடமையாகும் என்பதனை புறநானூற்றுப் பாடலில்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"[2]

(புறம்:312)

என்று பொன்முடியார் விளக்குகிறார். மகனைப் பெற்றெடுத்தல் மட்டுமே தாயின் கடமையன்று. அவனைச் சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை எதிர்கொள்ளத்தக்க வகையிலும், பயன்படும் வகையிலும் உடல் வலிமையும், மனவலிமையும் உடையவனாகப் பாதுகாத்து சமுதாயத்திற்கு வழங்குதலும் அவளுடைய கடமையாகும். புதல்வனைப் பெறுதல் மட்டும் தாயாகிய பெண்ணின் கடன் எனத் தொடங்கும் பொன்முடியாரின் பாடல், தந்தை, கொல்லன், வேந்தன் போன்றோர் வீரரை உருமாறுகின்ற இளைஞனின் வாழ்க்கையில் வகிக்கும் பங்கு பற்றி விவரித்துள்ளது.

நல்வெள்ளியாரின் நற்றிணைப் பாடல் தோழி தலைவிக்குக் கூறுவது போல் சிறைப்புறமாக இருக்கும் தலைவனுக்குச் சொல்லுவதாக அமைந்த பாடல்,

“பெருங்களிறு உழுவை அட்டெடன, இரும்பிடி
....
அரும்புண் உறுநரின் வருந்தி வைகும்”[3]

(நற்.47)

புலிக்கும் ஆண் யானைக்கும் நடந்த சண்டையில் புலி யானையைக் கொன்றுவிடுகிறது. இதனைக் கண்ட பெண்யானை தாங்கொணாத் துயரத்துடன் அண்மையில் ஈன்ற தன் குட்டியைத் தழுவிக் கொண்டு நடக்கக்கூட முடியாமல் வருந்துகிறது. குட்டியின் பொருட்டுச் சாகாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்யானையை உடைய நாட்டையுடைய தலைவனே உனக்கு நேர்ந்த பசலை நோய்க்குக் காரணமானவன். அவன் வந்து உன்னை மணந்தால் மட்டுமே இந்நோய் நீங்கும் என்று தோழி தலைவனை வரைவுகடாவுகிறாள்.

கடுந்தோட் கரவீரனார் என்னும் புலவரின் குறுந்தொகைப் பாடலில் தலைவியை மணக்காது இரவுக்குறி வந்து நீங்கும் தலைவனிடம் இரவுக்குறி மறுத்துத் தலைவியை மணந்துகொள் என்று வரைவு கடாவுகிறாள்.

“கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லர வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர்
செகுக்கும்”[4]

(குறுந்.89)

ஆண்குரங்கு இறந்துபட்டதால் வருந்திய பெண்குரங்கு தன் சிறிய குட்டியை உறவினரிடத்தில் சேர்த்துவிட்டு மலையின் உச்சிக்குச் சென்று பாய்ந்து தன் உயிரைவிடும். இத்தகைய நாட்டையுடைய தலைவனே இனி இரவில் வராதே. விரைந்து வந்து தலைவியை மணந்து கொள் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். இவ்விரு பாடல்களிலுமே தலைவனை தோழி வரைவு கடாவுகிறாள். கடுந்தோட் கரவீரனாரின் பாடல் ஆண்குரங்கு இறந்தவுடன் பெண்குரங்கு தன் குட்டியைச் சுற்றத்தினரிடம் சேர்த்துத் தான் உயிர்விடுகிறது. நல்வெள்ளியார் குறிப்பிடும் பெண்யானை ஆண் யானை இறந்தவுடன் மிகவும் வருந்தி தன் குட்டியின் பொருட்டு உயிர்வாழ்கிறது. பெண் ஆனவள் தன் கணவன் இறந்தாலும் தன் பிள்ளைகளின் நிலை கருதி தான் துயருற்றாலும் பிள்ளைக்காக வாழ்ந்து வருகிறாள் என்பதைத் தாயுள்ளத்தோடு நல்வெள்ளியார் கூறியிருப்பது போற்றுதற்குரியதாகும். இத்தகைய நாட்டையுடையத் தலைவன் விரைந்து தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்பதே தோழியின் குறிக்கோளாகிறது.

தாயின் பெருமை

போர் என்பது ஆணுக்குரியதாக முழுக்க மாறிவிட்ட சூழலில், தாங்கள் வாழும் சமூகத் தினரைக் காத்திடவும், குறுநிலை மன்னர்களின் நலனுக்காகப் போரில் ஈடுபடுவதற்காக ஆண் குழந்தைகளைப் பெற்றுத் தருவது பெண்களின் கடமையாக புறநானூறு சித்திரித்துள்ளது. போர்க்களத்தில் மகன் இறந்தாலும் அதைக் குறித்து பெருமிதம் அடைவதுதான் வீரத்தாயின் சிறப்பெனக் கருதப்பட்டது.

“மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்” என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே: கண்ணீர்
நோன் கழை துயல்வரும் வெதிரத்து
வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே.”[5]

(புறம்:277)

என்னும் பாடலில், புங்கண் உத்திரையார் வீரம் குறித்த புனைவைக் கட்டமைத்துள்ளார். கொக்கின் மெல்லிய இறகு போன்ற நரைத்த கூந்தலுடைய வயதான தாயின் மகன், போரில் எதிர்த்து வந்த யானையைக் கொன்றுவிட்டு, அவனும் இறந்துவிட்டான். இச்செய்தியைக் கேட்டவுடன், அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சிக்கும் மேலாக தாய் மகிழ்ந்தாள். கண்ணீர் வடித்தாள். இப்பாடலில், தாய்க்கும் மகனுக்குமான குரு தொடர்பினை விட, அரசியல் உறவு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மகனின் இறப்பு தனக்கு வலியைவிட, வீரமான மரணம் குறித்துத் தாய் மகிழும் செய்தி பாடல் வழியே வெளிப்பட்டுள்ளது.

“கெடுக சிந்தை கடிது இவள் துணிவே:
மூதில் மகிளராதல் தகுமே:

மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை,
யானை எறிந்து, களத்து ஒழிந்தனனே:
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெரு நிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே:
இன்றும், செருப்பறை கேட்டு, விருப்புற்று, மயங்கி,
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒரு மகன் அல்லது இல்லோள்,
"செருமுகம் நோக்கிச் செல்க" என விடுமே!"[6]

(புறம்:279)

என்னும் ஒக்கூர் மாசாத்தியார் பாடல், "தாய்" பற்றிய புதிய பிம்பத்தைக் கட்டமைத்துள்ளது. பெண் என்ற நிலையில் இழப்பின் வேதனையைப் பொருட்படுத்தாமல் சமுதாயத்திற்காக வாழ்கின்றவள் என்ற நிலையை அடைகின்றாள். இதுவரை நடைபெற்ற போர்களில் அவளுடைய தந்தை, கணவன் வீரத்துடன் போரிட்டு மடிந்துவிட்டனர். இன்று போர் முரசு ஒலிப்பன கேட்டவுடன் தனது ஒரே மகனான சிறுவனைப் போருக்கு ஆயத்தமாக்கிக் கையில் வேலைக்கொடுத்து "செருமுகம் நோக்கிச் செல்க" என ஆணையிடுகிறாள்.

போரில் தன்னை எதிர்த்து வந்த யானையைக் கொன்று இறந்தவரின் தாய் அவரைப் பெற்ற காலத்திலும், பெரிதும் மகிழ்ந்தவளாய்க் கண்ணீர் பெருக்கினாள். மகனின் இழப்பைவிட அவனது வீரச்செயல் தந்த பெருமிதம் கொள்வதாக பாடினியார் நச்செள்ளையார் பாடல் கூறுகிறது.

"நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள்,
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து, மாறினன்சுசு என்று பலர் கூற
"மண்டு அமர்க்கு உடைந்தனன்" ஆயின், உண்ட என்
முலை அறுத்திடுவென், யான்சுசு எனச் சினைஇ,
கொண்ட வாளொடு படு பிணம் பெயரா,
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறு ஆகிய
படு மகன் கிடக்கை காணுஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!"[7]

(புறம்: 278)

போர்க்களத்திலிருந்து தனது மகன் ஓடிப்போனான் என்பதைக் கேள்விப்பட்ட தாய் மனவருத்தம் அடைந்தாள். கையில் வாளை ஏந்தி போர்க்களமடைந்த அவள், தனது மகன் புறமுது கிட்டுச் சென்றிருந்தால் அவனுக்குப் பால் கொடுத்த முலைகளை அறுத்தெறிவேன், எனச் சூளுரைத்தாள். மார்பில் விழுப்புண்ணுடன் செங்குருதிப் படிந்து சிதைந்து கிடந்த மகனின் பிணத்தைக் கண்டவுடன் அவளடைந்த மகிழ்ச்சி, அவனைப் பெற்றெடுத்தக் காலத்திலும் பெரிதாக விளங்கியது.

இனக்குழுவின் நலன் அல்லது குறுநில மன்னரின் நில விரிவாக்கம் அல்லது வேந்தனின் அரசியல் மேலாதிக்கம் காரணமாக நடைபெற்ற போரில் தாய்-மகன் உறவு பற்றி மதிப்பீட்டினை காக்கைப் பாடினியார் பதிவாக்கியுள்ளார். போருக்காக ஆணைப் பெற்று, ஒதுங்கியிருப்பது பெண்ணின் இயல்பல்ல எனப் போதிக்கும் பாடல், மகனின் வீரச்செலுக்காக மகிழ்வது தான் தாயின் இயல்பு எனக் கூறப்பட்டுள்ளது. யானையை எதிர்க்கும் ஆற்றலுடன் போரிடுவது இளைஞனின் கடன் என்ற பாடல் வரிகள் வீரம் பற்றிய புனைவைக் கட்டமைக்க முயலுகிறது. குடும்பத்தை விட வேந்தனுக்காக செய்கின்ற போர் முதன்மையானது என்ற கருத்து பொன் முடியாரின் பாடலில் வெளிப்பட்டுள்ளது.

"சிற்றில் நல் தூண் பற்றி, "நின் மகன்
யாண்டு உளனோ?" என வினவுதி: என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்: ஒரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல,
ஈன்ற வயிரோ இதுவே:
தோன்றுவன்மாதோ, போர்க்களத்தானே."[8]

(புறம்: 86)

தனது மகனைப் பற்றிக் கேட்பவரிடம், "அவன் எங்கே இருப்பான் என்பதை நானறியேன். மலைக்குகையில் பதுங்கிக் கிடந்து பின்னர், வெளியே செல்லும் புலியைப் போல அவனைப் பெற்ற வயிறு இதுவே. அவன் தோன்றுவது போர்க்களமே" என்று பெருமித உணர்வுடன் தாய் சொல்கிறாள். மகன் புலி போன்றவன் என்பதும் அவன் போர்க்களத்தில்தான் இருப்பான் எனச் சொல்வதும் வீரத்தைப் போற்றுவது மட்டுமல்ல அன்றைய காலக்கட்டத்தில் தாயின் பெருமையைச் சுட்டிக்காட்டுகிறது.

தாயின் வீர உணர்ச்சி

சங்க கால மகளிர்க்கு வீர உணர்ச்சி இருந்த தன்மையை ஔவையார் பாடல் வழி அறிய முடிகிறது.

"கடல் கிளர்ந்தள்ள கட்டூர் நாடார்
வெந்து வாய்மடிந்து வேல் தலைப் டெயரித்
தோடு உலகத்து உழுதரு உத்துரந்தெறி நாட்டால்
வருபடை பொழிந்து வாய்க்கட விளங்கி
இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்படையாலின் மாண்பு உணர்வுடன்
ஓடாப்புட்கை விடலை தாய்க்கே"[9]

(புறம்:206)

கடல் போன்ற போர்கள் நடுவே ஒரு போர் வீரன் தன் படை மீது படையெடுத்து வரும் பகைவர் படையைச் சிதற அடித்துப் போரிடுகிறான். பகைவர் பலர் ஒன்று சேர்ந்து அவனைத் தாக்க இறந்து வீழ்ந்தான் அவனது உடல் எங்கும் வீரப்புண்கள் கேட்டதும் தாய் மகிழ்ச்சி அடைகிறாள். தாயின் வீர உணர்ச்சியை இப்பாடல் தெரிவிக்கிறது.

முடிவுரை

சங்ககால பெண்பாற்புலவர்களின் பாடல்களில், தாய் என்பவள் வீரமிக்கவளகாவும், போரில் மகன் வீர மரணமடைவது குறித்து பெருமிதம் கொள்பவளாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளாள். தாயின் கடமை குறித்து பொன்முடியார் பாடல் விளக்குகிறது. ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் மகனின் வீர மரணம் குறித்து தாய் மகிழ்ச்சியடையும் செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. போரிடுதல் ஆணின் செயலாகக் கருதப்பட்டாலும் போரிடுவதற்குத் தேவையான வீரத்தினையும், மனவலிமையையும் அவ்வீரன் தாயிடமிருந்தே பெறுகின்றான். அத்தாய் தன் குழந்தைக்கு வீரத்தையே பாலாக ஊட்டி வளர்க்கிறாள் என்பது பெண்பாற்புலவர்களால் பாடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்புகள்

1. குறுந்தொகை, பா.எ.135
2. புறநானூறு, பா.எ.312
3. நற்றிணை, பா.எ.47
4. குறுந்தொகை, பா.எ.89
5. புறநானூறு, பா.எ.277
6. மேலது, பா.எ.279
7. மேலது, பா.எ.278
8. மேலது, பா.எ.86
9. மேலது, பா.எ.20

துணைநூற்பட்டியல்

1. சோமசுந்தரனார்., பொ.வே. (உ.ஆ.), குறுந்தொகை உரையுடன், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1965
2. நாராயணசாமி ஐயர்.அ., (உ.ஆ.), நற்றிணை நானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், திருநெல்வேலி, 1967.
3. பாலசுப்பிரமணியன். கு.வெ (உ.ஆ) புறநானூறு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, மூ.ப. பிப்.2007.